DEPOSITION OF WITNESS

(Chapter XXV BNSS)

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.I,MANNARGUDI**
**ST.C.No. 409/2017 D.W. 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | சிவக்குமார் | **Caste** | : | |
| **Father's Name** | : | விசுவநாதன் | **Calling** | : | |
| **Village** | : | மன்னார்குடி | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | 50 |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 29.04.2026**

**முதல் விசாரணை :**

நான் நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற சம்மனை பெற்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எனது மனைவி பெயர் பிரமிளா. புகார்தாரர் கிருஷ்ணகுமார் என்னுடைய நண்பர் ஆவார். அவருக்கும், எனக்கும் 15 வருடம் பழக்கம். 2016 ம் வருடம் நான் புகார்தாரர் கிருஷ்ணகுமாரிடம் ரூ.2,00,000/- வட்டிக்கு கடனாக வாங்கியிருந்தேன். மாதம் ரூ.6/- பைசா வட்டி ஆகும். அப்போது நான் புகார்தாரர் கிருஷ்ணகுமாரிடம் எனது மனைவி பிரமிளாவை வெற்று காசோலை ஒன்றை கேரண்டிக்காக கொடுத்திருந்தேன். அதன்பிறகு நான் தொடர்ந்து வட்டி கட்டியிருந்த நிலையில் எனது குடும்ப சூழ்நிலை காரணமாக வட்டியை தொடர்ந்து கட்டமுடியவில்லை. அதற்காக நான் கிருஷ்ணகுமாரிடம் அவகாசம் கேட்டியிருந்தேன். அவரும் சரி என்று சொன்னார். பின்னர் எனது மனைவியின் காசோலையை வைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். இதுதொடர்பாக நான் அவரிடம் சென்று கேட்டேன். பின்னர் இருவரும் மூத்த வழக்கறிஞர் ஒருவர் முன்னிலையில் சமரசம் பேசினோம். அதில் அசல் வட்டியை சேர்த்து ரூ.3,80,000/- நான் தரவேண்டும் என்றும், அவர் என் மனைவி மீது போடப்பட்ட இந்த வழக்கை வாபஸ் வாங்கி கொள்வோம் என்றும் பேசினோம். அதுதொடர்பாக ஒரு ஒப்பந்தமும் போட்டுக்கொண்டோம். அந்த ஒப்பந்தம் போட்ட பிறகும் அதிகமான தொகை கேட்டதனால் சமரசம் ஆகவில்லை. இந்த வழக்கில் கண்டுள்ள காசோலை புகார்தாரரை கையொப்பம் செய்து வங்கியில் தாக்கல் செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கிற்கும், எனது மனைவியான பிரமிளாவுக்கும் எந்த சம்பந்தமில்லை. அவர் கையொப்பம் காசோலையில் இல்லை. நீதிமன்றத்தில்

காட்டப்படும் ஆவணம் என்ன வென்றால் நானும், இந்த வழக்கின் புகார்தாரரும் மூத்த வழக்கறிஞர் முன்னிலையில் போட்டுக்கொண்ட சமரச ஒப்பந்த ஆவணத்தின் நகல் ஆவணம். **எ.மசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. (**அசல் ஆவணம் கிருஷ்ணகுமாரிடம் உள்ளதால் நகல் தாக்கல் செய்யப்படுவதாக கூறியதால் மேற்படி அசல் ஆவணம் கிருஷ்ணகுமாரிடம் உள்ளது என்ற சங்கதியை நிரூபணம் செய்ய வேண்டும் என்ற நிபந்தனையில் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.**)

**<u>புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

புகார்தாரர் இந்த வழக்கை தாக்கல் செய்தது 2017 ம் வருடம் எனறால் சரிதான். தற்போது வரை 9 ஆண்டுகள் ஆகிறது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் ரூ.6/- பைசா வட்டி என்பது கந்துவட்டி ஆகும். ரூ.6/- பைசா வட்டியாக இருப்பின் நான் ஏதும் சட்டப்படியான நடிவடிக்கைகளுக்காக போலீஸ் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. அவர் எனது நண்பர் என்பதால் எடுக்கவில்லை. எனக்கும், புகார்தாரருக்கும் கடன் கிடையாது என்றும், எனது மனைவிக்கும், புகார்தாரருக்கும் தான் கடன் என்றால் சரியல்ல.

நான் சட்டப்படியான நடவடிக்கையோ, போலீஸில் புகாரோ கொடுத்தால் உண்மை நிலைமை தெரிய வந்துவிடும் என்பதை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் விபரம் எனக்கு நன்கு தெரியுமா என்றால் தெரியும். எனது மனைவி புகார்தாரர் அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு அளித்தாரா என்றால் எந்தவித அறிவிப்பும் அனுப்பவில்லை. 9 ஆண்டு காலமாக இந்த வழக்கு நடைபெற்று இருக்கும் நிலையில் கையெழுத்தை பொறுத்து நிபுணருக்கு அனுப்பினோமா என்றால் வக்கீல் தான் செய்ய வேண்டும். அசல் காசோலையிலும், பதில் அறிவிப்பின் பின் பக்கம் உள்ள கையெழுத்தும் எனது மனைவியுனுடையது தான் என்றும், தற்போது அதனை மறைத்து பதில் அறிவிப்பை எனது மனைவி அனுப்பவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

வழக்கில் தாக்கல் செய்துள்ள EXD1 உள்ள கையெழுத்து புகார்தாரருடையது அல்ல என்றும், இந்த ஆவணம் வழக்கிற்காக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. நகலை பொறுத்து கணினியில் edit செய்யலாம் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் அதுபற்றி தெரியாது. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 9ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் தாக்கல் செய்திருக்கும் ஆவணத்தில் யார்

தயாரித்தாரகள் என்ற விபரம் இல்லை என்றால் வழக்கறிஞர் தான் கிருஷ்ணகுமாரை அடித்து வரசொன்னார். உண்மையில் ஒரு ஆவணத்தை வழக்கறிஞரோ, எழுத்தரோ தயார் செய்திருந்தால் கீழே கையெழுத்து செய்திருப்பார்கள் என்றும், என்னால் தாக்கல் செய்யப்பட்ட ஆவணத்தில் ஆவண தயாரிப்பாளர் கையெழுத்து இல்லை என்றும், தற்போது வழக்கிற்காக என்னால் உற்பத்தி செய்யப்பட்டதால் தான் ஆவண எழுத்தர் பெயர் இல்லாமல் நகலாக இந்த ஆவணத்தை போலியாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.